# NEWSLETTER

**MAY 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION




## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


## வாழ்வியலும் வழிகாட்டலும்




உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் விழிப்புணர்வு செயலமர்வு 02.05.2024 அன்று முதலைக்குடா மகா வித்தியாலத்தில் இடம்பெற்றதோடு 30 மாணவர்கள் கலந்துகொண்டு தமக்கான தொழிற்கல்வியின் அவசியம் பற்றிய அறிவினையும் பெற்றுக்கொண்டனர். அத்தோடு அவர்களுக்கு வாழ்க்கைத்திறன் பயிற்சியும் வழங்கப்பட்டமை சிறப்பானதாகும். இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **கனடாவில் வசிக்கும் திரு.கோபால் பகீரதன் அவர்கள்** தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தார்.

## மாவிலங்கத்துறை மாணவர்களுக்கான கணினி செயலமர்வு

எமது அறக்கட்டளையின் நன்கொடை உறவான **மனித நேய நம்பிக்கை நிதியத்தினரின் அனுசரணையுடன்** மாவிலங்கத்துறையில் தொடர்கட்டங்களாக மாணவர்களுக்கான கணிணிச் செயலமர்வு நடைபெற்று வருகின்றது. அந்தவகையில் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் 18.05.2024 அன்று இடம்பெற்றது. எமது தொழிநுட்பவியல் கல்லூரியின் பயிற்சி உத்தியோகத்தர் திரு.சார்ள்ஸ் கிரேஷியன் அவர்களால் இச்செயலமர்வு சிறப்பாக நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## சாரதா நிலைய மாணவர்கள் சிலம்பத்தில் சாதனை



உலக சிலம்பம் விளையாட்டு சங்கத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச சிலம்பாட்ட போட்டி 04.05.2024 அன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. அன்னை ஸ்ரீ சாரதா நிலைய மாணவிகளில் 18 பேர் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் 11 வெள்ளிப்பதக்கம் 02 மண்ணிற பதக்கம் 07 உள்ளடங்கலாக 20 பதக்கங்களை பெற்றுக் கொண்டனர். கடுமையான சுற்றுப் போட்டிகளுக்கு மத்தியில் களமாடி அனைவரின் பாராட்டையும் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டனர். இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சர், உலக சிலம்பம் விளையாட்டு சங்கத் தலைவர், யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலநாட்டவர்களும் கலந்து சிறப்பித்தனர். எமது சாரதா நிலைய மாணவர்களுக்கு சிலம்பத்தை சிறப்பாக பயிற்றுவித்த ஆசான் திரு ஜெயம் ஜெகன் அவர்கள் பயிற்றுவித்திருந்தார்.

# Top news

## வாழ்க்கைத்திறன் ஆலோசகரின் வருகை




UK இல் பிரபல்யமான கல்லூரிகளான Writtle College & IOM International Business School போன்றவற்றில் தலைமை விரிவுரையாளராகவும் முதுமானி கற்கைகளுக்கான சிறப்பான விரிவுரையாளராக 20 வருட அனுபவத்துடனும் Optima Foundation-UK இன் பணிப்பாளராகவும் இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் சமூகப்பணியாளராக தாழ்ந்துபோன சமூகத்தினை கட்டியெழுப்பும் சேவையினை ஆற்றியதுடன் பல நாடுகள், நிறுவனங்களுக்கு ஒரு திட்டமிடல் ஆலோசகராகவும் பணிசெய்த ஒரு அனுபவம் மற்றும் கல்விப்புலமை உடைய இலண்டனில் வசிக்கும் கலாநிதி.தோமஸ் ஜெயந்திரன் அவர்கள் எமது கல்லூரியுடன் நீண்டகால தொடர்பினைப் பேணியதுடன் எமக்கான உதவிகள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். இலங்கைக்கு வருகை தந்த அவர் 16.05.2024 அன்று எமது கல்லூரிக்கு வருகைதந்து சேவையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு கல்லூரி மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை உள்ளடங்களாக இந்தியா சென்று வாழ்வியல் பயிற்சி ( TOT ) பெற்று வந்த எமது சேவையாளர்களுக்கு வாழ்க்கைத்திறன் பயிற்சி தொடர்பான சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் போன்றவை பற்றியும் வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சிக்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும், கலந்துரையாடியதுடன் எதிர்காலத்தில் இளைஞர்களை வலுவூட்டுவதற்கான எமது செயற்பாடுகள் பற்றிய ஆலோசனைகளையும் வழங்கினார்.







## எமது ஸ்தாபகரின் அகவை தினம் !







பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை வலுவூட்டி எமது சமூகத்தை மாற்றியமைக்கும் தமது கனவை, இன்று நனவாக்கிக் கொண்டிருக்கும் சமூக நலன்புரி அமைப்பு மற்றும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் ஐயா அவர்களின் பிறந்த தினமானது 16.05.2024 அன்று மிகவும் சிறப்பான முறையில் எமது தொழில்நுட்பவியல் கல்லூரியில் கொண்டாடப்பட்டதோடு பிறந்த தினத்தை முன்னிட்டு விவேகானந்த பூங்காவில் மரக்கன்றுகளும் நடப்பட்டது. சமூக நலன்புரி அமைப்பு, விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி, சமுதாய அறக்கட்டளையின் சேவையாளர்கள் உள்ளிட்ட கல்லூரி மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## ஆன்மிகம் சார்ந்த தலைமைத்துவம்

எமது அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பில் மாதாந்தம் நடாத்தப்படும் தலைமைத்துவப்பயிற்சியில் வைகாசி மாதத்திற்கான செயலமர்வானது 10.05.2024 அன்று வாழும் கலை நம்பிக்கை நிதியத்தின் சேவையாளராகிய சட்டத்தரணி. சத்ரி தயாமா ஜி அவர்களது ஆற்றுகையின் கீழ் இடம்பெற்றதோடு தியானம், சுவாசப்பயிற்சி உள்ளிட்ட பல செயற்பாடுகளூடாக அவர் பயிற்சியை செவ்வனே எடுத்தியம்பியமை சிறப்பானதாகும். எமது அறக்கட்டளையின் திட்ட முகாமையாளர் உள்ளிட்ட ஏனைய சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மாதிரிப்பாடசாலையில் சித்திரைக் கொண்டாட்டம்

ஆரையம்பதி திருநீற்றுக்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள எமது மாதிரிப் பாலர் பாடசாலையான நலன்புரி பாடசாலையானது அமெரிக்காவில் வசிக்கும் திருமதி.மனோகரி நல்லதம்பி குடும்பத்தினரால் பொறுப்பெடுக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. இப் பாலர்பாடசாலையில் சித்திரை தினக் கொண்டாட்டம் 02.05.2024 அன்று மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது. பாலர் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுடன் எமது அறக்கட்டளையின் சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



## பாலர் பாடசாலைகளுக்கான களவிஜயம்



விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் பாலர் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து நடாத்தி வருகின்றது. இப்பாலர்பாடசாலைகளின் மேற்பார்வைக்கான களவிஜயம் 03.05.2024 அன்று எமது அறக்கட்டளையின் கள சேவையாளர்களால் முன்னெடுக்கப்பட்டதோடு பாலர்பாடசாலைகளின் தேவைப்பாடுகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# வருடாந்த சுற்றுலா 2024 !




எமது விவேகானந்த குடும்பத்தினரின் வருடாந்த சுற்றுலா 07.05.2024 மற்றும் 08.05.2024 ஆகிய இரு தினங்களில் கண்டி, நுவரெலியா ஆகிய பிரதேசங்களை மையப்படுத்தியதாக இடம்பெற்றது. எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் சேவையாளர்கள் உள்ளிட்ட எமது கல்லூரி மாணவர்களும் இச்சுற்றுலாவில் கலந்து சிறப்பித்தனர்



## பெற்றோருடனான கலந்துரையாடல்

மனித நேயநம்பிக்கை நிதியத்தின் நிதி உதவியுடன் நடைபெறுகின்ற Office management & IT மாணவர்களுக்கான பெற்றோருடனான கலந்துரையாடல் 02.05.2024 அன்று விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி கொம்மாதுறை கிளையில் கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்கள் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர் திரு.ராஜு கபீரியல் அவர்களினால் நடாத்தப்பட்டது. இப்பயிற்சியின் நோக்கம், அதன் முக்கியத்துவம் மற்றும் இப் பயிற்சியின் நிதி வழங்குனர்கள் பற்றிய விபரங்கள் பெற்றோருக்கு தெரியப்படுத்தப்பட்டதோடு க.பொ.த உயர்தரத்தின் பின்னர் தமது வாழ்க்கையினை திட்டமிட்டு ஒரு சிறந்த எதிர்காலத்தினை அடைந்துகொள்வதுடன் அடிப்படையான கணினி அறிவினை வழங்கிடும் நோக்கிலே இந்த பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் விசேடமாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களில் உள்ள இளைஞர்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள இளைஞர்களை பிரதேச செயலகத்தின் ஊடாக தேர்வு செய்தே பயிலுனர்கள் உள்வாங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## சுயதொழில் முயற்சியாளர்களுக்கான களம்







விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான முதலீட்டு ஊக்குவிப்புத்தொகையை வழங்கும் வண்ணம் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தினூடாக எமது சமுதாயத்தின் தொழில் முயற்சியாளர்களை அடையாளம் கண்டு அவர்களின் மேம்பாட்டிற்கான தனது பங்களிப்பை வழங்கிவருகின்றது. அந்த வகையில் எமது அறக்கட்டளையினால் அடையாளம் காணப்பட்ட சுயதொழில் முயற்சியாளரான திருமதி.தங்கமலர் கணேசராஜா அவர்களுக்கான முதலீட்டு ஊக்குவிப்புத்தொகையாக முதற்கட்டமாக 30 000 ‘ரூபாய் வழங்கப்பட்டதோடு அதற்கான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டது. இச்செயற்பாடானது வாழ்வாதார ஊக்குவிப்பாக மட்டுமன்றி அவரது குடும்பத்தினர் மற்றும் மூன்று பிள்ளைகளுக்குமான கல்வி மேம்பாட்டிற்கும் பாரியதொரு பங்களிப்பாகும். இச்செயற்பாட்டிற்காக நிதி அனுசரணையை எமது அறக்கட்டளை உறவான **அமெரிக்காவில் வசிக்கும் திரு.வாமதேவன் அமர்நீதி அவர்கள்** வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது



## பாடசாலைக்கான விளம்பரப் பதாதை கையளிப்பு

மட்டக்களப்பு/இந்துக் கல்லூரியினரின் கோரிக்கைக்கு அமைவாக அவர்களுக்கு, ஆற்றுப்படுத்துகைக்கான விளம்பரப் பதாதை 21.05.2024 அன்று எமது திட்ட முகாமையாளரால் வழங்கி வைக்கப்பட்டது. எமது அறக்கட்டளையின் கள சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் வைகாசி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்





